திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர்அவர்களின் நடவடிக்கைகள்
பிறப்பிப்பவர் : திரு. ம.கா. ஈழவேந்தன்.

ந . க. எண். 3283/2025/எப்1 நாள்: 27.02.2026

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் – தூத்துக்குடி மாவட்டம்– திருச்செந்தூர் நகராட்சி – கீழ் திருச்செந்தூர் கிராமம் – சர்வே எண். 268/2A2A, 268/2B2, 268/2B1A, 268/8A1, 268/8A2, 268/4A1, 268/4B1A (2.45 ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைபிரிவு அமைந்துள்ளது – தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டது – மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை :
1. திரு. வெ. பாலகிருஷ்ணன் த/பெ. வெங்கடேசன் 76, தெற்கு புதுத்தெரு என்பவரது கடித நாள். 31.10.2025.
2. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைநாள். 04.05.2017.
3. அரசாணை எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை சுற்றிக்கை கடிதம் ந.க.எண்.6530/2020/TCP–6, நாள்.28.04.2021
5. தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை:

பார்வை 1ல் காணும் மனுவில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் நகராட்சியில் கீழ திருச்செந்தூர் கிராமம் சர்வே எண். 268/2A2A, 268/2B2, 268/2B1A, 268/8A1, 268/8A2, 268/4A1, 268/4B1A (2.45 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைகள் 43 எண்ணம் மனைபிரிவுகளாக அமைக்க தொழில் நுட்ப அங்கீகார எண். 180/2025, நாள். 29.10.2025 ன் படி அங்கிகாரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள். 04.05.2017ன் படி, திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி 3ன் படி பரிசீலனைக் கட்டணமாக ரூ.43,000/– மற்றும் விதி 9ன் படி மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகை 3% (மூன்று விழுக்காடு) தொகை ரூ. 27500/–, மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ரூ. 62500/– விளம்பரபலகை வைப்புத் தொகை ரூ. 1,500/– பராமரிப்பு வைப்புத்தொகை ரூ. 250000/– ஆகியவைகளுக்கு செல்லான் எண்.173/CP/25–26/0001793 நாள். 20.01.2026 ன் படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

தூத்துக்குடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது தொழில்நுட்ப அங்கீகார எண். 180/2025, நாள். 29.10.2025 ல் சிறப்பு நிபந்தனைகளின் படி அங்கீகாரம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் கூடுதல் நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண். 268/2A2A, 268/2B2, 268/2B1A, 268/8A1, 268/8A2, 268/4A1, 268/4B1A (2.45 ஏக்கர்) அமைக்கப்பட்டுள்ள 43

எண்ணம் குடியிருப்பு மனைகளுக்கு மட்டும் இதன் மூலம் அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அங்கீகாரம் தொழில் நுட்ப அனுமதியும் மற்றும் மனைபிரிவு அங்கீகாரம் வழங்கிய எண். குறிப்பிட்டு விளம்பர போர்டு வைத்து புகைப்படம் எடுத்து கொடுக்க வேண்டும்.

2. அங்கீகாரம் வழங்கிய பின்பு அல்லது தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்பு மனைபிரிவு செய்யப்பட்டுள்ள அளவுகளில் எவ்வித மாற்றமும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தூத்துக்குடி அவர்களது முன் அனுமதி பெறாமல் செய்யக்கூடாது.

3. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளினை தேவைப்படும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து கட்டிட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.

4. மனைபிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பிளாட்டுகளில் வீடு கட்டும்போது சம்பந்தப்பட்ட பிளாட் உரிமையாளர்கள் தனித்தனியே வரைபடம் கொடுத்து நகராட்சி மூலம் கட்டிட அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நில உரிமைதாரர் விற்பனை செய்யும் போது அறிவுறுத்த வேண்டும்.

5. நன்கொடை பத்திரம் மூலம் நகராட்சி அல்லது அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட இடங்கள் குத்தகைக்கு விடவோ நில உரிமைதாரரே பிளாட் போட்டு விற்பனை செய்வதோ அல்லது சொந்தமாக எடுத்துக்கொள்ளவோ கூடாது இதில் நில உரிமைதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

6. மனைபிரிவு செய்துள்ள சர்வே எண். சர்வே எண். 268/2A2A, 268/2B2, 268/2B1A, 268/8A1, 268/8A2, 268/4A1, 268/4B1A (2.45 ஏக்கர்) பரப்பிற்கு காலிமனை வரி செலுத்தப்பட வேண்டும்.

27.2.24

ஆணையாளர்
திருச்செந்தூர் நகராட்சி

27/2/2024

பெறுநர்:
திரு. வெ. பாலகிருஷ்ணன்
த/பெ. வெங்கடேசன்
76, தெற்கு புதுத்தெரு
திருச்செந்தூர்.

நகல் :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம்,
2. சார் பதிவாளர் அவர்கள், திருச்செந்தூர்.
3. வட்டாட்சியர் அவர்கள் திருச்செந்தூர்
4. வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு, திருச்செந்தூர் நகராட்சி.